Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6.50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண் 4

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது மாசி 22ஆம் நாள் ஷவ்வால் 19 (5-3-64) வியாழக்கிழமை இதழ் 24

# தபால், தந்தி சேவை ஸ்தம்பிதமாகலாம்

## யாழ். ஆஸ்பத்திரியில் குழந்தைகள் கஷ்டம்

### டாக்டர்கள் வேலைநிறுத்தம் செய்வதன் விளைவு

### அவசரகால சேவைக்கு மட்டுமே மூவர்!

யாழ்ப்பாணம், வியாழன்

ஆஸ்பத்திரியில் அவசரகால சேவையாக, சத்திரசிகிச்சை மற்றும் பிரசவம் முதலியவற்றைக் கவனிப்பதற்காக மூன்று வைத்திய நிபுணர்களை வைத்திய நிபுணர் சங்கமும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கமும் நேற்று அனுப்பி வைத்தன. வேலைநிறுத்தம் ஆரம்பித்த பின் இரண்டு டாக்டர்கள் செய்து வந்த 'அவசர கால சேவை' யைச் செய்யவே இவர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். ஆனால் வார்டுகளில் உள்ள நோயாளிகளைப் பார்வையிடவோ அவர்களுக்குச் சிகிச்சையளிக்கவோ டாக்டர்கள் எவரும் இல்லை. குழந்தைகளின் வார்ட்டில் உள்ள நோயுற்ற குழந்தைகள்தான் இந்த வேலைநிறுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

## வேலைநிறுத்தம் பரவுகிறது

### சுகாதாரமந்திரி எச்சரிக்கை: டாக்டர்கள் புறக்கணிப்பு

கொழும்பு, புதன்

வேலைநிறுத்தம் செய்யும் வைத்திய நிபுணர்களுக்கும் டாக்டர்களுக்குமெதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று சுகாதார மந்திரி திரு. பதியுதீன் மஹ்மூத் விடுத்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது தங்களது வேலைநிறுத்தத்தை நாட்டின் வேறு சில பகுதிகளுக்கும் விஸ்தரிப்பதென்று வைத்திய நிபுணர்கள் சங்கமும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கமும் முடிவு செய்துள்ளது.

காலி, மாத்தறை, லுணுவை, பாணந்துறை, அவிசாவளை ஆகிய ஐந்து இடங்களிலுமுள்ள அரசாங்க ஆஸபத்திரிகளைச் சேர்ந்த டாக்டர்களும் இன்று முதல் வேலைநிறுத்தம் செய்வர்கள். வேலைநிறுத்தம் செய்யும் வைத்திய நிபுணர்கள் சங்கத்தினதும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தினதும் காரியக் கமிட்டிகள் நேற்றிரவு இதுசம்பந்தமான முடிவை செய்துள்ளது.

### "ஆதரவு கொடுப்பதில்லை"

வேலை நிறுத்தம் செய்யும் வைத்திய நிபுணர்களுக்கும் டாக்டர்களுக்கும் ஆதரவு கொடுப்பதில்லையென்று அரசாங்க ஆஸபத்திரி கங்காணிமார் யூனியனும் அகில இலங்கை சுகாதார பகுதி தொழிலாளர் யூனியனும் முடிவு

(2-ம் பக்கம் பார்க்க)

## மலேசியா மகாநாடு தோல்வி

பாங்காக், மார்ச். 4

மலேசியா, இந்தோனேஷியா பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் உயர்தர மந்திரிகள் இந்த நாடுகளிடையே ஒரு சமரச தீர்வை ஏற்படுத்துமுகமாக இங்கு நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளதாக பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு மந்திரி தெரிவித்துள்ளார்.

## உடற் குறைபாடுள்ளவருக்கு புதிய விடுதி

யாழ்ப்பாணம், வியா.

உடற் குறைபாடுள்ளவர்களுக்காக யாழ்ப்பாணம் பண்ணையிலே இன்று மாலை 6 மணிக்கு புதிய விடுதியொன்று திறக்கப்படுகிறது. 18 வயதுக்குக் குறைந்த உடற் குறையுள்ளவர் இதில் சேரலாம். 1936ம் வருடம் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் வெள்ளிவிழா ஞாபகசபையினர் வயோதிபருக்காக ஆரம்பித்த விடுதி இப்போது அங்கக்குறைபாடுள்ளவர்களின் இல்லமாக நடத்தப்படுகிறது.

## பல இடங்களில் தாமத வேலை

### தபால், தந்திகள் தேங்குகின்றன

கொள்ளுப்பிட்டி, புதன்

தபால் உத்தியோகஸ்தர்கள் தங்கள் வழக்கமான வேலையைவிட வேறு வேலையைச் செய்ய இன்று மறுப்பார்கள் என அறியப்படுகிறது. இதனால் நாட்டின் பல பகுதிகளிலும் தபால் தந்தி சேவைகள் பெரிதும் பாதிக்கப்படுமென நம்பப்படுகிறது.

நாட்டின் பல பகுதிகளில் உள்ள தபாற் கந்தோர்களைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் "ஓவர் டைம்" வேலை செய்ய மறுத்ததால் தபால், தந்திச் சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அவிசாவளை, பண்டாரவளை, காலி, மாத்தளை, இரத்தினபுரி, குருநாகல், யாழ்ப்பாணம், மாத்தறை, நுவரேலியா, அனுராதபுரம், ஹட்டன், கண்டி, மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள தபால் உத்தியோகஸ்தர்களும், கொழும்பு மத்திய தந்திக கந்தோர், கொழும்பு பெரிய தபாற் கந்தோர் ஆகிய கந்தோர்களில் உள்ள உத்தியோகஸ்தர்களும், இம்மாதம் 2ம் திகதி தொடக்கம் "ஓவர் டைம்" வேலை செய்ய மறுத்துள்ளதால் நாட்டின் தபால், தந்தி சேவைகள் மோசமாகியுள்ளன. (6-ம் பக்கம்பார்க்க)

## சிராவஸ்தியும் கட்டுப்பாடும்

கொள்ளுப்பிட்டி, புதன்

எம். பி.க்களும், செனட்டர்களும் தங்கும் விடுதியான 'சிராவஸ்தி' க்குள் இனிமேல் எம். பி. க்களினதும், செனட்டர்களினதும் கார்களை தவிர மற்ற எவரின் காரும் உட்செல்லக்கூடாது என சபாநாயகர் உத்தரவிட்டுள்ளார்.

சிராவஸ்தியில் இளம் பெண்கள் நடமாட்டம் அதிகரித்துவருவதாக அண்மையில் செனட்டர் ஒருவர் புகார் செய்ததைத் தொடர்ந்து பார்லிமெண்டிலும் இது சம்பந்தமாக பலத்த பரபரப்பும், கிண்டல்களும் வெளியிடப்பட்டது ஞாபகமிருக்கலாம்.

## வடமாகாண ஆசிரியர் சங்க கோரிக்கைகள்

யாழ்ப்பாணம், வியாழன்

வடமாகாண ஆசிரியர் சங்க விசேட பொதுக் கூட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் திரு. மு. பேராயிரவர் தலைமையில் நேற்று மாலை நடைபெற்றபோது, நிர்வாக சபையால் தயாரிக்கப்பட்ட கீழ்வரும் ஒன்பது கோரிக்கைகள்பற்றி ஆராயப்பட்டன:

மொழிவாரி வித்தியாசமின்றிச் சம தராதரத்திற்குச் சம சம்பளம் கொடுக்கவேண்டும்.

எல்லா ஆசிரியர்களும் பயிற்றப்படவேண்டும்.

மாதாந்தக் கழிவு இல்லாது இளைப்பாறும் சம்பளத் திட்டம்.

ஆசிரியருக்குப் பூரண அரசியல், சிவில் உரிமைகள்.

(6-ம் பக்கம் பார்க்க

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்
FOLIDOL METASYSTOX
கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்
PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

### மணிவாக்கு

மனிதன் வெளித்தோற்றத்தையே பார்க்கின்றான்; ஆனால் தெய்வமோ இதயம் எப்படி என்றே பார்க்கின்றார்.

— சாமுவேல்.

ஈழநாடு
EELA NADU
EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 289

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு
மாசி மீ 22உ (5-3-64)

## வாபஸ் பெறுக

உத்தியோக மொழி காரணமாக சேவையிலிருந்து ஒய்வு பெறுவதற்கு மனுச்செய்த அரசாங்க ஊழியர் தமது மனுப்பத்திரங்களை வாபஸ்பெற்றுக் கொள்ளலாமென்று அரசாங்கம் இப்போது மனம்மாறியுள்ளதாம். இது வரவேற்கத்தக்கதாகும்.

மொழிப்பிரச்னை தீராதபிரச்னையாக வளர்ந்து கொண்டு நாட்டின் அமைதியைக் கெடுத்து வருவதால்தான் அதற்குச் சுமுகமான நிரந்தர தீர்வு காண்பதற்காக பிரதமர் இப்பொழுது முயற்சி செய்து வருகிறார். கட்சி அரசியலுக்கு அப்பால் தேசியரீதியில் இப்பிரச்னைக்குத் தீர்வு காணப் பிரதமர் முயற்சி செய்துவரும் சமயத்தில் ஓய்வு பெற மனுச்செய்த அரசாங்க ஊழியருக்கு சலுகையளிப்பதென்று மந்திரிசபை உபகுழு செய்த தீர்மானம் சரியானதே.

ஆனால் இந்த முயற்சிகளுக்கு திருஷ்டிபட்டதுபோல் திறைசேரி புதிய சுற்றுநிருபம் ஒன்றை விடுத்துள்ளது. சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை எதற்கும் இதுவரை தோற்றாதவர்களும் அதற்குத் தகுந்த காரணம் காட்டாதவர்களுமான, 1956-ம் ஆண்டுக்குமுன் அரசாங்கசேவையில் சேர்ந்த ஊழியர்கள் மூன்றுமாத முன்னறிவித்தலுடன் கட்டாயமாக ஒய்வுபெறும்படி கோரப்படுவர் என்பதுதான் திறைசேரியின் புதிய சுற்றுநிருபமாம்.

மொழிப்பிரச்னை காரணமாக நாட்டில் ஏற்பட்ட வேற்றுமைகளை நீக்கி சகல சமூகங்களுக்கிடையிலும் ஐக்கியத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி செய்யும் இச்சமயத்தில் திறைசேரியின் இச்சுற்று நிருபம் 'வெண்ணெய் திரண்டுவரும் சமயம் தாழியை உடைத்த கதை'யாக இருக்கிறது. தேசியரீதியில் மொழிப்பிரச்னைக்குத் தீர்வு காணசர்வகட்சி மகாநாடு கூடி முடிவுசெய்வதற்குமுன் அவசரப்பட்டுதிறைசேரி இச்சுற்றுநிருபத்தை விடுத்துள்ளது. அரசாங்க பலருக்கும் மட்டுமல்ல தமிழர்களுக்கு அரசாங்கத்தின் பேச்சிலும் செயலிலும் அவநம்பிக்கையை ஏற்படுத்தும். பழைய அரசாங்க ஊழியர் சிங்களத் தேர்ச்சி பெறுதற்காக தண்டிக்கப்படக்கூடாது என நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை இன்னும் முடிவடையவில்லை இதற்குள் அவர்களைக் கட்டாயமாக ஒய்வு பெறச் செய்யும் கடும்தண்டனை விதிப்பது நீதிமன்றத்தையே அவமதிப்பதாகும்.

சிங்களம்மட்டும் சட்டத்தின் சிற்பியான காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்த சமயத்திலும் அதன்பின்னரும் 'பழைய அரசாங்க ஊழியர் பாதிக்கப்படமாட்டார்கள் என்று வாக்குறுதியளித்திருக்கிறார். அவரது கொள்கைகளைப் பின்பற்றுவதாகக் கூறும் இன்றைய அரசாங்கத்துக்கு முற்றிலும் முரணான வகையில் கட்டாய ஒய்வு சம்பந்தமான திறைசேரியின் இச்சுற்றுநிருபம் இருக்கின்றது.

திறமையும் அனுபவமும மிக்க அரசாங்க ஊழியர்களின் சேவையை நிராகரித்துவிட்டு 'சிங்களம்மட்டும் சட்டம்'என்ற தகுதியின்மீது அரசாங்க சேவைக்கு ஆட்களைத் தெரிவு செய்வது நாட்டின் சீரான நிர்வாகத்துக்குஉதவி செய்யாது. நாட்டின் அமைதியையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி செய்யும் இச்சமயத்தில் நிலைமையைக்கெடுக்கக்கூடிய இச்சுற்றுநிருபத்தை திறைசேரி உடனடியாக வாபஸ்பெற வேண்டும்.

## கொழும்பில் சிவராத்திரி

கொழும்பு, செவ்.

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் ஆதரவில் கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீமத் அருணாசலேசுவரசுவாமி கோவிலில் இம்மாதம்12-ந்திகதி மகாசிவராத்திரி விழாவும் அடுத்த நாள் சிவராத்திரி அமாவாசைத் தின சங்கம தீர்த்தவிழாவும் நடைபெறும்.

சிவராத்திரி தினத்தன்று விசேஷ பூசையும் பலரின் பேச்சுக்களும், தோத்திரப் பாடல்களும், இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன நான்கு சாமப் பூசைகளும் நடைபெறும்.

### திருக்கேதீச்சரத்தில்

மகா சிவராத்திரியை முன்னிட்டு இம்மாதம் 12-ம் திகதி வியாழக்கிழமை ஈழத்துச்சிவனடியார் திருக்கூட்டத்தினர் திருக்கேதீஸ்வரம் திருவாசக மடத்தில் காலை 8 மணி முதல் மாலை5 மணி வரை செபம், தியானம், கூட்டு வழிபாடு, புராண படலம், பக்திப்பாடல் ஆகிய நிகழ்ச்சிகளை நடாத்தி அதன் பின்னர் திருக்கேதீஸ்வர ஆலய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வர்.

---

## தமிழ்ப் பண்டிதர்கள் மந்திரியை சந்திப்பர்

உடுப்பிட்டி, புதன்

இலங்கையிலுள்ள தமிழ்ப் பண்டிதர்களுக்கு வழங்கப்படும் சம்பளவிகிதம் போதாதென்றும் அதனை அதிகரிக்கும்படி கல்வி மந்திரியைக் கோருவதெனவும் இலங்கைத் தமிழ்ப்பண்டிதர் சங்கம் தீர்மானித்துள்ளதாகவும் இச்சங்கம் கல்வி மந்திரியைப் பேட்டி காண்பதற்காகிய ஒழுங்குகளை உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் செய்துவருகிறார் என்றும் பொதுக் காரியதரிசி பண்டிதர் திரு. குக. வைரவனார் தெரிவித்தார்.

---

## பார்லிமென்டில்

கொழும்பு, புதன்

ஜனப்பிரதிநிதிகள் சபை நாளை கூடும்பொழுது அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை சம்பந்தமான விவாதம் ஆரம்பாகும என்று எதிர்பார்க்கப்படுகிறது'

## "என்றும் அழியாதது திருக்குறளே"

பரந்தன், புதன்

"எந்த சிருஷ்டியும் ஒருநாள் மறையும் தன்மையை உடையதாக இருக்கிறது. ஆனால் வள்ளுவனார் இயற்றிய திருக்குறளோ பிரமதேவனுடைய சிருஷ்டிகளிலும் விஞ்சியதாய், என்றும் அழியாவரம்பெற்று சர்வ காலத்திற்கும் எல்லா மதத்தினருக்கும், சாகியத்தாருக்கும் உரிய ஒரு பொது நூலாகமாறி விட்டது." இவ்வாறு கலவெட்டித்திடல் காந்தி நிலையத்தாரால் நடத்தப்பட்ட வள்ளுவர் தினத்தில் செல்வி பரமேஸ்வரி கனகசபை பேசுகையில் கூறினார். இவ்விழாவுக்கு திரு. இ. த. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். திரு. ந. சுப்பிரமணியம், செல்வி ச. தங்கமணி, சி. சிவபாக்கியம் ஆகியோரும் பேசினர்.

---

## வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், வியாழன்

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் ஆதரவில் வள்ளுவர் விழா சிறப்பாக நடைபெற்றது. விசேட பூசையுடன் திருமறையும் ஓதப்பட்டது.

"உலகமக்கள் யாவராலும் போற்றக்கூடியவகையில் திருக்குறள் நூல் அமைந்துள்ளது. எல்லோரும் அதனைக் கற்க வேண்டும். இல்லந்தோறும் திருக்குறள் மிளிரவேண்டும். சைவசித்தாந்தக் கருத்துகள் பல திருக்குறளில் அடங்கியிருக்கின்றன" என்று சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி தமது தலைமையுரையில் குறிப்பிட்டார். செல்வன் சேதுராமன், செல்வன் பா.சிவானந்தம் ஆகியோரும் பேசினர்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம். வியாழன்

கைதடி மேற்கு சரஸ்வதி வாசிகசாலையின் புதுவருட உத்தியோகஸ்தர்கள் விபரம் வருமாறு:-

தலைவர் இ. கதிராமு, உபதலைவர்: மா. கதிராமு, காரியதரிசி: பொ. செல்லையா, உபகாரியதரிசி: க. கோபால், தனாதிகாரி: ச. வாரித்தம்பி, உபதனாதிகாரி: பூ. சின்னத்துரை மற்றும் திருவாளர்கள் நா. கந்தையா, க. கந்தையா, ஐ. மார்க்கண்டு, நா. சின்னத்தம்பி, க. கிருஷ்ணர், வ. துரை, சி. சாணையன், வா. விநாசித்தம்பி ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

## ஐயாறன் எழுதுவது

பள்ளிக்கூட எல்லைக்குள்ளாக யாரும் புகைக்கப்படாதென்று சென்னை அரசாங்கம், கல்வி டைரக்டருடன் கலந்து யோசித்து புதிய உத்தரவு போட்டுள்ளது. இப்போது அந்த உத்தரவு கண்டிப்பாக அமுல் செய்யப்படுகிறதாம்.

பள்ளிக்கூட சுகாதார சபையாரின் சிபார்சின் மீது இந்திய தலைமை அரசாங்க சுகாதாரப் பகுதியினரே இது பற்றி எல்லா ராஜ்ய அரசாங்கங்களுக்கும் இது பற்றி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டதாகத் தெரிகிறது.

இச்செய்தியைப் படித்ததும் இங்குள்ள ஒரு கல்வி ஸ்தாபனத் தலைவர், இலங்கையிலும் இவ்வித உத்தரவு அமுலுக்கு வந்தால் எவ்வளவோ மேலாக இருக்கு மென்றும், சுகாதாரத்துக்கும், ஒழுங்குக்கும், பள்ளிக் கூடப் புனிதத்துக்கும் இது அவசியமென்றும் கூறினார்.

ஏற்கெனவே இது பற்றி இப்பத்தியில் எழுதியதாக ஞாபகம். ஆசிரியர்கள் புகைப்பதால் அந்தப் பழக்கம் மாணவர்களுக்கும் வருவதாக இருக்கின்றது. மாணவர்களின் மேலான நன்மையைக் கருதி பள்ளிக்கூடத்திலே, ஆசிரியர்மார்களும் புகைக்காமல் இருப்பது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை.

இலங்கை அரசாங்கமும் இவ்வித உத்தரவைப் போடுமா? அந்த உத்தரவு வருவதற்கு முன்பே இங்குள்ள ஆசிரியர்கள் இச்சிறிய தியாகத்தைச் செய்து வழி காட்டக் கூடாதா?

* * *

திருக்கேதீச்சரத் திருப்பணி சம்பந்தமாக சமீபத்தில் ஒரு கூட்டம் நடந்தது. எல்லாரும் எழுந்து நிற்க தேவாரத்துடன் கூட்டம் ஆரம்பமாயிற்று.

திருஞானசம்பந்தரும், சுந்தரரும் அருமையான பதிகங்களை இந்த ஸ்தலத்துக்காகப் பாடியுள்ளனர். அதில் ஒன்றைப் பாடுவரென்று கூட்டத்தில் பலரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். ஆனால், திருச்சிராப்பள்ளி குன்றுடையானைப் பற்றிய தேவாரம் பாடியதும் ஏமாற்றமாயிருந்தது.

எந்தச் சமயத்தில் எந்தத் தேவாரத்தை யார் பாடவேண்டுமென்ற ஒழுங்கை முன்கூட்டியே ஒழுங்கு செய்வதாயின் இவ்வித தவறு ஏற்பட மாட்டாது.

முன் அறிவித்தலின்றி, திடீரென 'தேவாரம் பாடு' என்று யாரையாவது கையைக் காட்டி விடுத்தால், அவருக்கு யோசிக்கவும் நேரமில்லை. அப்போது வாயில் வந்த தேவாரத்தைப் பாட வேண்டி ஏற்படுகிறது.

* * *

இது சாதாரண அற்ப விஷயமல்ல. மற்றோர் அன்பரும் இதைப்பற்றி குறிப்பிட்டதால் இதை எழுதுகின்றேன். பௌத்த, கிறிஸ்தவ சமயங்களிலே குருமார்களுக்கு முதலிடம் அளிக்கபபடுகின்றது. சைவ சமூகத்திலே குருமார்கள் பலர் இருப்பினும், அவர்களை இவ்வித கூட்டங்களுக்கு அழைப்பதில்லை என்றும், அவர்கள் ஒதுக்கி வைக்கப்படுவதாகவும் அந்தச் சைவ அன்பர் வருத்தத்துடன் கூறினார்.

கோவில் நிர்வாக விஷயத்திலும், குருக்கள்மார்களுக்குச் சாதாரணமாக இடமளிப்பதில்லை என்றும் அதனல் குருமார்களின் மதிப்பையும் குறைப்பதாக இருக்கிறதென்றும், இவ்வித விஷயங்களில் குருமார்களுக்குத் தக்க இடம் அளித்தால, கோவில் காரியங்கள் அதிக சிறப்பாக இருக்கு

(4-ம் கலம் பார்க்க)

(5-ம கலத் தொடர்ச்சி)

மென்றும் அதே அன்பர் தெரிவித்தார்.

கோயில் நிர்வாகம், திருப்பணி முதலிய விஷயங்களில் குருமார்களுக்கு, சரித்திர காரணங்களால் அவர்களுக்குரிய இடமில்லாமற் போயிருக்கலாம். இந்தப் பெருங் குறை தீரவேண்டும். இக்குறை தீருவதாயின், மேலே குறிப்பிட்டது போன்ற தவறுகள் நீங்கவும் குருமார்களும் அதிக மதிப்பும் உற்சாகமும் பெற்று இவ்விஷயங்களில் ஈடுபடவும், சைவ சமயப்பணிகள் மேலாக நடைபெறவும் வழி பிறக்கும்.

* * *

தொண்டர்கள் தம் தகவிலுள்ளார் போலுந் தூய நெறிக்குத் தூ நெறியாய் நின்றார் போலும், பண்டிருவர் காணாப் படியார் போலும் பக்தர்கள் தம் சித்தத் திருந்தார் போலும், கண்ட மிறையே கறுத்தார் போலுங் காமனையுங் காலனையுங் காய்ந்தார் போலும்,இண்டைச்சடை சேர் முடியார் போலும் இன்னம் பர்த்தான் தோன்றி யீசனரே.

—திருநாவுக்கரசர்

---

# தொழில்நுட்ப அரசாங்க ஊழியருக்கு சம்பளஉயர்வு

கொழும்பு, புதன்

சிங்களத்தில் தேர்ச்சிபெருத காரணத்தினல் நிறுத்தப்பட்டிருந்த சம்பள உயர்வு சென்ற மாதத்திலிருந்து சில அரசாங்க ஊழியருக்கு தொடர்ந்து வழங்கப்பட்டுவருவதாக அறியப்படுகிறது.

தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்களுக்கே இவ்வாறு சம்பள உயர்வு வழங்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

சிங்களத்தில் தேர்ச்சிபெற அரசாங்கம் இருவருட அவகாசம் அளித்துள்ளதால் இந்தக்கால எல்லைக்குள் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சம்பள உயர்வைப்பெறத் தகுதியுள்ளவர்கள் எனக் கருதப்பட்டதாலேயே இவ்விதம் சம்பள உயர்வு அளிக்கப்பட்டுவருவதாக நம்பப்படுகிறது.

இதுவரை சிங்களத்தில் தேர்ச்சிபெருத தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதால் இதேநிலையில் இருக்கும் தமக்கும் தமது சம்பளப்படி வழங்கப்பட வேண்டுமென மற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அரசாங்கத்தைக் கோரலாமெனவும் கருத்து நிலவுகிறது.

# வேலைநிறுத்தம் பரவுகிறது. . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளது.

வேலைநிறுத்தம் செய்யும் டாக்டர்களுக்கும் வைத்திய நிபுணர்களுக்கும் மேற்கூறப்பட்ட இரு யூனியன்களினதும் ஆதரவு உண்டென்று வேலைநிறுத்தம் செய்யும் வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர் பி. ஆர். அந்தனிஸ அண்மையில் தெரிவித்ததை மேற் கூறப்பட்ட இரு யூனியன்களும் மறுத்துள்ளன அரசாங்க ஆஸபத்திரி கங்காணிமார் சங்கத்தின் பொதுக் காரியதரிசி திரு. கே. டபிள்யூ. ஜயதிஸ்ஸ இது சம்பந்தமாக தெரிவிக்கையில்; வைத்திய நிபுணர்களின் வேலை நிறுத்தம் நீதியற்றது என்றும் தமது சங்கத்தின் ஆதரவு அவர்களுக்குக் கிடையாதென்றும் கூறினார்.

## தாதிமார் யூனியன் ஆதரவு

வேலை நிறுத்தம் செய்யும் வைத்திய நிபுணர்களையும் டாக்டர்களையும் கண்டித்து அகில இலங்கை தாதிமார் யூனியன் தங்களது ஆதரவை சுகாதார மந்திரி திரு. பதியூதீன் மஹ்மூத்துக்குத் தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக சுகாதார மந்திரி திரு. பதியுதீன் மஹ்மூத்துக்கு அகில இலங்கை தாதிமார் யூனியனின் பொதுக் காரியதரிசி அனுப்பியுள்ள கடிதமொன்றில் வைத்திய நிபுணர்கள் தனிப்பட்ட தொழில் நடத்தக்கூடாதென்று அரசாங்கம் செய்துள்ள முடிவை தமது யூனியன் வரவேற்கிறதென்றும் தனிப்பட்ட தொழில் முற்ருக நீக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளது.

அகில இலங்கை அரசாங்க சிரேஷ்ட அப்போதிக்கரிமார்களினது தொழிற்சங்கத் தலைவர் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார். "நோய்களினின்று நாட்டைப் பாதுகாப்பதில் தான் எமது முக்கிய பங்கு தங்கியிருக்கிறது. டாக்டர்களினதும் வைத்திய நிபுணர்களினதும் வேலைநிறுத்தத்தால் இந்த நாட்டு மக்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாத வகையில் நாங்கள் பாதுகாப்பளிப்போம். இதுவே எமது கடமையுமாகும்".

சீன-இந்திய

# எல்லைப்பிரச்னை பற்றி சீனவின் நிலை மாறவில்லை?

## ராஜதந்திர அவதானிகள் தெரிவிக்கும் கருத்து

பீக்கிங், மார்ச் 4

**இந்தியா, முன் நிபந்தனை எதுவும் விதிக்காமல் பேச்சுவார்த்தைக்கு வர இணங்கினல் சீன-இந்தியப் பிரச்னையில் தீர்வு ஏற்படுத்துவதற்கான சாத்தியம் இருக்கிறதென சீனக் கம்யூனிஸ்ட் பத்திரிகையான "பீப்பிள்ஸ் டெய்லி" கூறுகிறது.**

10 ஆபிரிக்க நாடுகளுக்கும், பர்மா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளுக்கும் சீனப் பிரதமர் விஜயம் செய்ததன் எதிரொலி பற்றி எழுதியுள்ள ஆசிரிய தலையங்கத்தில் "பீப்பிள்ஸ் டெய்லி" பத்திரிகை மேற்கண்டவாறு கூறியுள்ளது.

ஆசியத் தலைவர்களிடம் திரு. சூ-என்-லாய் நடத்திய சம்பாஷணைகள் சீன-இந்தியப் பேச்சுவார்த்தைகளுக்குத் தடையாக இருந்த முட்டுக்கட்டைகளை அகற்றவில்லையென்றும், சீன தான் மேற்கொண்ட நிலையிலிருந்து மாறவில்லையென்றும் இதிலிருந்து ராஜதந்திர அவதானிகள் கணிக்குறர்கள்.

கொழும்பு யோசனைகளைத் தாம் பூரணமாக ஏற்றுக்கொண்டதாயும் சீனவும் அப்படிச் செய்தால் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தமுடியுமென்றும் இந்தியா வற்புறுத்தி வருகிறது.

ஆனல் கொழும்பு யோசனை குறித்து இரு நாடுகளும் மாறுபட்ட வியாக்கியானம் செய்வதாயும், கொழும்பு யோசனை அடிப்படையில் இது பற்றி விவாதிக்கலாமென்றும் சீன கூறிவருகிறது.

கொழும்பு யோசனையின் சகல அம்சங்களையும் சீன அமுல்நடத்தியோ, அல்லது மேலும் விட்டுக்கொடுத்தோ இருப்பதாயும், மேற்கு எல்லைகளில் லடாக்குக்கும், சிங்கியாங்குக்குமிடையே இந்தியா காவல் முகாம் அமைப்பது பற்றிய முக்கிய யோசனை மட்டுமே இன்னும் நிறைவேற்றப்படாமல் இருப்பதாயும் சீன கூறுகிறது.

சீனப் பிரதமரும், அவரது வெளிநாட்டு மந்திரி திரு. சென-யீயும் பர்மா எல்லையிலுள்ள தென்மேற்கு சீனவுக்கு வந்திருக்கின்றனர். இன்னும் அவர்கள் பீக்கிங் திரும்பவில்லை. எப்போது அவர்கள் பீக்கிங் திரும்புவார்களென்று குறித்து அதிகாரிகளும் தெரிவிக்கவில்லை.

இதிலிருந்து அவர்கள் இன்னும் பல நாடுகளுக்குச் செல்லக்கூடுமென ஊகிக்கப்படுகிறது. இந்தோனேஷியா, கம்போடியா ஆகிய நாடுகளின் பெயர்களே அதிகமாகக் குறிப்பிடப்படுகின்றன. திரு. சூ-என்-லாய் 3 மாதம் பீக்கிங்குக்கு வெளியே சுற்றுப்பிரயாணத்தில் கழித்திருக்கிருர்.

# "காஷ்மீர் பற்றிய இந்திய கொள்கை மாறவில்லை"

## அமெரிக்க மந்திரி விஜயம் குறித்து சாஸ்திரி அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 4

காஷ்மீரை ஒரு சுயேச்சையான ராஜ்யமாக்குவதின் மூலம் இப்பிரச்னையைத் தீர்க்கும் அமெரிக்க யோசனை குறித்து விவாதிக்க, யு. எஸ். உதவி வெளிநாட்டுமந்திரி திரு. டார்பட் டில்லி வருவது சம்பந்தமாக பார்லிமெண்டின் இருசபைகளிலும் பல அங்கத்தினர்கள் கேட்டார்கள்.

இலாகா இல்லாதமந்திரி லால்பகதூர்சாஸ்திரி இதற்குப் பதிலளிக்கையில் காஷ்மீர் சம்பந்தமாக இந்தியாதன் நிலையிலிருந்து சிறிதும் மாருது என்றும் இந்தவிஷயம் பாதுகாப்புசபையில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறினர். அமெரிக்க யோசனைபற்றிய விஷயம் வெறும் பத்திரிகைச் செய்தியே என்றும் அவர் கூறினர்.

பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் உபதலைவர் திரு. ஜோர்ஜ் பிரௌன் பாதுகாப்புசபையில் பிரிட்டிஷ் பிரதிநிதி காஷ்மீர் பற்றிநிகழ்த்தியபிரசங்கத்தைக் கண்டித்திருக்கிருர். பிரிட்டன் எந்தக்கட்சியையும் ஆதரித்திருக்கக்கூடாது என அவர் அபிப்பிராயம் கூறினர்.

இதற்கிடையில் கடந்த 17-ந் திகதி ஒத்திவைக்கப்பட்ட பாதுகாப்புசபைக் கூட்டத்தை மீண்டும் கூட்டுமாறு பாகிஸ்தான் கோரியிருக்கிறது. சீனப் பிரதமரின் விஜயம் குறித்தும் தமது அரசாங்கத்துடன் ஆலோசனை கலக்க வேண்டிய அவசியம் குறித்தும் காஷ்மீர் விவாதத்தை ஒத்திவைக்க வேண்டும் என பாகிஸ்தான் வெளிநாட்டுமந்திரி திரு. பூட்டோ அப்போது சபையைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க சபை ஒத்திவைக்கப்பட்டது.

## ஏழாவது நாளாக உண்ணுவிரதம்

பேராதனை, புதன்

பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முன்னுள் பொருளாதாரப் பகுதி தலைவராகவிருந்த டாக்டர் எப். ஆர். ஜயசூரியா இன்றுடன் ஏழாவது நாளாக உண்ணுவிரதமிருந்துவருகிருர். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார விரிவுரையாளராக டாக்டர் எச் ஏ. டி' எஸ். குணசேகரா நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்தே டாக்டர் ஜயசூரியா உண்ணுவிரதமிருந்துவருகிருர்.

—

## "ஆங்கிலம் அவசியம்"

ஹட்டன், புதன்

சென். ஜோன்பொஸ்கோ கல்லூரியின் வைபவமொன்றில் இலங்கையிலுள்ள ஆஸ்திரேலிய வர்த்தக கமிஷனர் திரு. பிறேங் வி. ஸ்ரீட் பேசுகையில் ஆங்கிலமொழி ஒரு உலக மொழியென்றும் இந்த அழகான தீவிலுள்ள குழந்தைகளின் இரண்டாவது மொழியாக ஆங்கிலம் போதிக்கப்பட வேண்டுமென்றும் கூறினர்.

—

## 57 பேர் மாண்டனர்

சந்தியாகோ, மார்ச் 4

சிலியில் ஏற்பட்ட பூகம்பத்தைத் தொடர்ந்து 57 பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டது. 40,000 பேர் வீடிழந்தனர்.

## ராஜாஜி வென்ருர்

புதுடில்லி, மார்ச் 4

ராஜாஜியின் பென்ஷனுக்கு வரி விதிக்கக்கூடாது என சுப்ரீம்கோர்ட் தீர்ப்பளித்திருக்கிறது. கவர்னர் ஜெனரல்பதவியிலிருந்து ஓய்வு பெற்றதன் காரணமாகத் தாம் பெறும் பென்ஷனுக்கு, சென்னை கார்ப்பரேஷன் வரிவிதிப்பது சட்டவிரோதம் என ராஜாஜி முன்பு தொடர்ந்திருந்த வழக்கை, ஹைகோர்ட் தள்ளுபடி செய்தது. ஆனல் ராஜாஜி அப்பீல் செய்து கொண்டதின்பேரில் ஹைகோர்ட்டின் தீர்ப்பை சுப்ரீம் கோர்ட் நிராகரித்தது.

## உலக சுகாதார மகாநாடு

ஜெனீவா, மார்ச் 4

உலக சுகாதார ஸ்தாபனத்தின் 17-வது மகாநாடு நேற்று ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ளது. 3 வாரம் நடைபெறும் இம்மகாநாட்டில் 400 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்

—

## ராதாகிருஷ்ணன் கவலை

புதுடில்லி, மார்ச் 4

கிறீஸ் மன்னரின் சுகவீனம் குறித்து இந்திய ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அந்நாட்டு ராணிக்குத் தனது கவலையைத் தெரிவித்திருக்கிருர்.

—

## பால விபத்தில் 7 பேர் பலி

ஹைதராபாத், மார்ச் 4

ஆந்திர பிரதேசத்தைச் சேர்ந்த காக்கிநாடாவுக்கருகில் ஒரு பாலத்தின் 4 தூண்கள் சரிந்ததால் 7 பேர் கொல்லப்பட்டனர். 5 பேர் காயமடைந்தனர். மாண்டவர்களில் மாவட்ட என்ஜினியரும் ஒருவர்.

—

## சூஸ்டிலுக்கு வெளியேற உத்தரவு

லாஸேன், மார்ச் 4

ஒரு சமயம் பிரெஞ்சு மந்திரியாய் இருந்தவரும், ஜெனரல் டிகாலின் பரம விரோதியுமான ஜேக்வஸ் சூஸ்டில் சுவிட்ஸர்லாந்திலிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டிருக்கிருர். இப்போது அவர் இத்தாலிக்கு சென்றிருப்பதாக நம்பப்படுகிறது.

திரு. சூஸ்டில், அல்ஜீரியாவில் முன்னுள் கவர்னர் ஜெனரலாயும், ஜெனரல் டிகாலின் மந்திரி சபையில் தகவல் மந்திரியாகவும் இருந்தார்.

டிகாலின் அல்ஜீரியக் கொள்கையை எதிர்த்தது காரணமாக, 1960-ம் ஆண்டு அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

திரு. சூஸ்டிலியைக் கைது செய்யும் வாரண்ட் 1962 டிசம்பரில் பிறப்பிக்கப்பட்டிருப்பதாக பிரெஞ்சு நீதி இலாகா அதிகாரிகள் அறிவித்தனர்.

—

## மக்ஆர்தர் சுகவீனம்

வாஷிங்டன், மார்ச் 4

இரண்டாவது உலக யுத்தத்தின் போது பசிபிக்கில் அமெரிக்கத் தலைமைப் பீடத்திலிருந்தவரும், கொரியாவில் ஐ. நா. தளபதியாய் இருந்தவருமான ஜெனரல் டக்ளஸ் மக் ஆர்தர் வயிற்று நோய் காரணமாக வால்டர் ரீட் ராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் அவருக்கு வயது 84.

# "உள்ளத்தை பிழியும் சம்பவங்களை கூறினர்"

## பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகள் குறித்து மந்திரி

கௌஹாத்தி, மார்ச் 4

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்துள்ள அகதிகள் குறித்து மத்தியமந்திரி திரு. லேஹர்சந்த்கன்னு, அஸ்ஸாம் முதல்மந்திரியுடனும் இதரமந்திரிகளுடனும் பேச்சு நடத்தினர்.

தங்கள்மீது கிழக்கு பாகிஸ்தான் துப்பாக்கிப் படையினர் இழைத்த கொடுமைகள் குறித்து உள்ளத்தைப் பிழியும் சம்பவங்களை அகதிகள் கூறினர் என்று திரு. கன்னு தெரிவித்தார்.

மந்திரிக்கு அகதிகள் சமர்ப்பித்த மகஜர் ஒன்றில் தாங்கள் விட்டுச் சென்றசொத்துக்களுக்கு உடனடியாக நஷ்டஈடு தரும்படியும், தங்களைக் குடியமர்த்த 60 மைல் பிரதேசத்தை பாகிஸ்தானிடம் கோர வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள்.

இந்த அகதிகள் இந்தியாவிலேயே தங்க விரும்புகிருர்களென்றும் பாகிஸ்தானுக்குச் செல்ல மறுத்துவிட்டனர் என்றும் திரு. கன்னு தெரிவித்தார்.

—

## ஏதென்ஸில் ஆர்ப்பாட்டம்

நியுயோர்க், மார்ச் 4

சைப்ரஸ் சம்பந்தமாக நேற்றுக் கூடிய பாதுகாப்பு சபை, எவரும் பேச விரும்பாததால் சில நிமிடங்களுக்குள் இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது. தங்கள் அரசாங்கத்தின் உத்தரவுகளைப் பெறுவதற்காக அங்கத்தினர்கள் காத்திருக்கிருர்கள் என அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் கிரேக்க தலைநகர் ஏதென்ஸில் பிரிட்டிஷ், அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நேற்று நடைபெற்றன.

## 111.5

கொழும்பு, புதன்

கடந்த மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 111.5 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரிமாத வாழ்க்கைச் செலவுப் புள்ளியிலும் சென்றமாத வாழ்க்கைச்செலவு 0.3 அதிகமாகும்.

—

## சீனவில் பாக். அதிகாரிகளுக்கு பயிற்சி

புதுடில்லி, மார்ச் 4

சில பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகளுக்கு சீனவில்ராணுவப்பயிற்சி அளிக்கப்படுவதாக அரசாங்கம் கருதுவதற்கு இடமிருப்பதாய் பாதுகாப்புமந்திரி திரு. சாவன் கூறினர்.

இந்திய வானப்பிரதேசத்தில் பாகிஸ்தான் விமானங்கள் ஊடுருவல் செய்வதால் அதன் விமான பலம் இந்தியாவை விடச் சிறந்தது என்பதைக் காட்டவில்லை என்றும், அதன் எரிச்சலூட்டும் போக்கையே காட்டுவதாயும மந்திரி கூறினர்.

ஆட்சேபக் குறிப்புகளை அனுப்புவதாய் இந்த ஊடுருவல்கள் நிற்காது என்றும், அந்த விமானங்களைத் தடுத்துநிறுத்துவதால்தான் ஊடுருவல்கள் நிற்கும் என்றும் மந்திரி ஒப்புக்கொண்டார்.

—

## சிங்கப்பூரில் புதிய தமிழ் தினசரி

சிங்கப்பூர், மார்ச் 4

"தமிழ் மலர்" என்ற புதிய தமிழ் தினசரி ஒன்றை உதவிப் பிரதமர் டாக்டர் டோக்சின்சை ஆரம்பித்துவைத்தார்.

சென்னை அசெம்பிளி

# தி. மு. க. தேர்தல் முறை பற்றி சர்ச்சை

சென்னை, மார்ச் 4

தி. மு. க. தேர்தல் பிரசார முறைபற்றி சென்னை அசெம்பிளியில் சர்ச்சை கிளம்பியது. காங்கிரஸ் ஆட்சியினல் ஏழைகள், மேலும் ஏழையாக உள்ளதாயும், எனவே அடுத்த பொதுத்தேர்தலில் தமதுகட்சி அமோக வெற்றிபெறும் என்றும் திரு. ஆர். நாராயணன் (தி. மு. க.) கூறியதைத்தொடர்ந்து சர்ச்சை நடைபெற்றது.

திரு. ஜே மாதா கவுடர் (காங்கிரஸ்) பேசுகையில் நகரசபைத் தேர்தல்களில் தோறற தி. மு. க. ஹிந்தியை எதிர்த்து திருச்சி சின்னச்சாமி தீக்குளித்ததாகக் காட்டும் சுவரொட்டிப் படங்கள் மூலம் வாக்காளர்களை ஏமாற்றியதால்தான் சென்னை நகரில் வெற்றிபெற்றது என்றும், தி. மு. க. தந்திரத்தை மக்கள நன்ருகத் தெரிந்துகொண்டு விட்டதாயும், அக்கட்சி ஒரு போதும் அரசாங்கம் அமைகக முடியாதென்றும் கூறினர்.

திரு. ராமசாமி (தி. மு. க.) பேசுகையில் கூறியதாவது:-

"சின்னச்சாமியின் நடத்தை சம்பந்தமாக சந்தேகத்தைக் கற்பிப்பதோ, அல்லது அதனை தனது நலனுக்கு தி. மு. க. பயன்படுத்திக் கொண்டதாகக் கூறுவதோ நல்லதல்ல. சின்னச்சாமி தி. மு. க. கட்சியைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும், அவரது நடவடிக்கைகளை தி. மு. க. ஒத்துக்கொள்ளவில்லை."

## பலே ஆசாமி!

சென்னை, மார்ச் 4

அரசாங்கமொழியாக ஹிந்தி திணிக்கப்படுவதை ஆட்சேபிக்கும் வகையில் கோட்டை பிரதான வாசலுக்குக கிழக்கே தீயினல் எரித்துக்கொண்டு உயிர்விடப்போவதாய் டி. டி. ஷண்முகம் என்ற நபர் பொலிஸுக்கு அறிவித்திருந்தார்.

குறிப்பிட்ட நேரத்தில் உருக்கு தொப்பியணிந்தபொலிஸாரும், பத்திரிகையாளரும் படம் பிடிப்போரும் தயாராகக்காத்திருந்தனர். ஆனல் அந்த ஆசாமி அங்கேதென்படவில்லை. நெடுநேரம் காத்திருந்த அனைவரும், பின் கலைந்து சென்றனர்.

—

## பட்ஜட்

புதுடில்லி, மார்ச் 4

பார்லிமெண்டில் நிதிமந்திரியின் பட்ஜட் பற்றி பொது விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.

—

## மலேஷிய மகாநாடு

பாங்காக், மார்ச் 4

மலேசியா சம்பந்தமான மந்திரிகள் மகாநாடு நேற்று ஆரம்பமாகியது. எவ்விதச் சுமுக முடிவும் ஏற்படுவதற்கு முன் இந்தோனேஷிய கொரில்லாக்கள் வாபஸ் பெறப்பட்டு எல்லையில் சரியான முறையில் யுத்தநிறுத்தம்ஏற்படவேண்டும் என மலேஷிய உதவிப் பிரதமர் துன் அப்துல்ரஸாக்கூறினர்.

# ஐரோப்பிய கன்னியின் ஆனந்தத் தாண்டவம்

(க. இராமச்சந்திரன்)

சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற செல்வி டொல்பி ஜோர்ஜின் பரதநாட்டியக் கச்சேரி மிகவும் புனிதமான முறையில் அமைந்திருந்தது. அதைப் பார்க்க அன்று திரண்டு வந்திருந்த பெருமக்கள் கூட்டம் கலையின் தனிக் குடைக்கீழ், சாதி, மத, நிற, மொழி பேதம் எதுவுமின்றி சகலரும் சகோதரர் போல் இருந்து இன்புறலாம் என்பதற்கு ஒப்பற்ற எடுத்துக்காட்டாக விளங்கியதெனலாம். பலருக்கு இக்காட்சி ஒருபுது அனுபவமாகும்.

என்னைப் பொறுத்தமட்டில் அன்று மாலை ஒன்றரை மணித்தியாலமும் ஆழ்ந்த ஆனமசாதனை வேலையாகவே கழிந்தது. அட்டவணையில் ஆறுவதாகக் குறிப்பிடப்பட்ட 'நடனமாடினர்', என்ற நடனம் நடக்கும்போது நான் நல்லாய் உருகி ஆனந்தக் கண்ணீர் விட்டேன். எனக்கு அருகில் இருந்த அன்பர் திரு. செ. லோகநாதன் அவர்கள் தன் கைக்குட்டை எடுத்துக் கண்ணீர் துடைத்ததைக் கவனித்துவிட்டார். அந்த நேரத்தில் அவரும் உணர்ச்சி வயப்பட்டிருந்தார். என்னை நோக்கி "நீங்கள் நல்லாய் உருகிவிட்டீர்கள். இன்றைய நாட்டியம் எனது நல் உணர்ச்சியையுந் தூண்டிவிட்டது. இதைப் பாராட்டியாராவது கட்டுரை எழுதவேண்டும்" என்ருர்.

உணர்வு நிலையில் இருவரும் ஒத்திருந்தபடியால் அவருக்கு யான் பின்வருமாறு பதில் கொடுத்தேன்:-

"அந்நியக் கன்னி ஒருத்தி நமது புராதன தெய்வீகக் கலையை அருமையாக ஆர்வத்துடன் கற்றுத் தேர்ந்து அந்தக்கலையின் உயிர் ஆத்ம சாதனம் என்பதை நன்குணர்ந்து தன்னை மறந்த நிலையில் இப்படி ஆனந்த நடனம் புரியும்போது நாம் நம்மை மறந்து அந்த ஆனந்தத்தில் ஆழ்ந்து விட்டதில் வியப்பொன்றுமில்லை. என் வாழ்வில், சென்ற அரை நூற்ருண்டுக்கு மேல், இந்தியாவிலும் இலங்கையிலும் எத்தனையோ பரதநாட்டியக் கச்சேரிகள் பார்த்திருக்கிறேன். ஆனல், இப்படி உணர்ச்சி உச்சநிலையடைந்தது இது இரண்டாம் முறையாகும். முதல்தரம் அநுபவம் பெற்றது, ஜேர்மனியில அந்நிய மக்கள் மத்தியில், உலக அறிஞர் மகாநாடு ஒன்றில், ஓர் இந்தியப் பெண் ஓடியபோதாகும்."

**பூர்வஜென்ம உபாசனை**

பரத நாட்டியக் கலையில் கன்னி டொல்பியடைந்துள்ள அற்புத சித்தி, அன்னரது தந்தையார் உத்தியோகங் காரணமாக இலங்கையில் தங்கியுள்ள சிறுகால எல்லைக்குள் கற்றதால் பெற்றதாகக் கூற முடியாது. இந்துக்களாகிய நமக்குத் தனிக்கலைகள் பல உள்ளன. அவற்றுள் கலையழகு நிறையப் பெற்ற ஆனந்தத் தாண்டவத் திருவுருவம் தமிழகத்திலே, தமிழனுடைய பக்தி வாழ்வில் விளைந்த பண்பட்ட உள்ளத்தில் ஊறி வெளிப்பட்ட ஒன்ருகும். உயர்வுற உயர்ந்த இக்கலை அழகில் ஆர்வங் கொள்வதற்குப் பூர்வ ஜென்ம உபாசனையுஞ் சேர வேண்டும். எனவே, டொல்பி ஜோர்ஜ் இக்கலைமீது கொண்டுள்ள ஆர்வம்போன பிறவியில் தொட்டு விட்ட குறையில் ஏற்பட்ட ஒன்ருயிருத்தல் வேண்டும்.

அம்மட்டோ! அன்னரிடம் மிளிரும் ஆன்மீக சக்தி தம்பத்தால் ஊறியதெனக் கூடக் கூறலாம். பெற்ருேர் இருவரும் இறையன்பும் அரிய மனப்பண்பாடும் பொருந்தியவர்கள். தந்தையாரை யான் முதன் முதல் சந்தித்த போது, எத்தனையோ வருஷங்களாக அறிந்தவர்கள் போல் இருவரும் பல ஆன்மீக விஷயங்கள் பற்றிச் சம்பாஷித்தோம். அப்போது அவர் அத்யாத்மத்துறையில் தாம் பெற்ற சில அநுபவங்களை எம்முடன் கலந்து கொள்ள விரும்பி, "உங்கள் கொழும்புத்துறைப் பெரியாரிடம் யான் பக்தி விசுவாசம் கொண்டதற்கு உதவியாயிருந்தது யான் இலங்கைக்கு வருமுன் குர்ஜீவ்-ஒஸ்பென்சி உபதேசங்களில் நன்கு ஈடுபட்டிருந்ததாகும்" என்று கூறி, "உங்கள் சமய மஞ்சரியில் (Religious Digest) குர்ஜீவைப் பற்றிய ஓர் அரிய கட்டுரையை படித்து இன்புற்றேன். ஆகையால், நான் இப்போது கூறிய விஷயம் உங்களுக்கு நன்கு விளங்கும் என்று முடித்தார். அடியார்களை ஈடேற்றுவதில் குர்ஜீவ் கையாண்ட முறைகள் யோகர் சுவாமிகளின் வழக்கை ஒத்தனவேயாம் என்பது அவர் கருதிய உண்மை.

**கலைச்செல்வங்களை எடுத்துச் செல்கிருர்**

திரு. ஜேம்ஸ் ஜோர்ஜ் கனடா தேசத்தின் அரசியல் பிரதிநிதியாக மாத்திரம் இங்கு வதியவில்லை. ஏனைய நாடுகளிலிருந்து வந்து திரும்பிய ஸ்தானிகர்கட்கு அவர் புறம்பானவர். அவர் தமது தேசத்தின் சிறப்புக்கும் பெருந்தன்மைக்கும் சீவகாருண்ணியத்துக்கும் ஒரு சின்னமாக அவர் எங்கள் மத்தியில் வாழ்ந்துள்ளார். இந்த மாதத்தில் அவர் தம் தாய்நாடு திரும்புகிருர். அப்படிச் செல்லும்போது அவர் தம்முடன் நமது சமய உண்மைகளையும் கலைச் செல்வங்களையும் தம்முடன் எடுத்துப் போகிருர். அவரும் அவரது அன்புக் குடும்பமும் அவற்றையெல்லாம் தங்கள் தாய் நாட்டிலும் அதன் அயல் நாடான அமெரிக்காவிலும் பரவச் செய்வார்களென நாம் கட்டாயமாக நம்பலாம். இந்த முறையில் அவர் எங்கள் அத்யாத்மப் பிரதிநிதியாக அங்கு இருக்கப் போவது எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய விஷயம்!

நாகரிகம் பெற்று வாழும் மக்கள் இனம் ஒவ்வொன்றும் தமக்கென்று ஒரு தனிக்கலைகளைப் பெறறுள்ளனர். பெரிபௌதிகத்தில் ஊறியுள்ள மேல்நாடுகளின் கலைகள் ஆத்மஞானத்தின் சேவையில் ஈடுபட்டிருக்கவில்லை. எனவே, கலைப்பெருக்கமானது ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் தனித்தனி நதிகளாகப் பாய்ந்து சென்றுள்ளன. சற்றேறக் குறைய இருபது ஆண்டுகட்கு முன்னர்தான் ஆசிரியாவின் முக்கியமாக இந்தியாவின், கலைகளின் சம்பிரதாயங்களையும் இலட்சியங்களையும் அமெரிக்கரும் ஐரோப்பியரும் சரியானபடி புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

1960-ம் ஆண்டில் சர்வமத சரித்திர மகாநாட்டிற்கு ஜேர்மனி சென்றிருந்தபோது, அங்கு குழுமியிருந்த தத்துவப் பேராசிரியர்களும் விஞ்ஞானிகளும் பரதநாட்டியம் போன்ற அருங்கலைகளில் எவ்வளவு ஆர்வங்கொண்டுள்ளார்களென்பதை நேரில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. அப்போது பேளின் சர்வகலாசாலையில் கலாநிதிப்பட்டத்திற்குப் படித்துக்கொண்டிருந்த செல்வி மீனுதிதாஸ் என்பவர் 15-9-60 மார்பேக் சர்வகலாசாலை மண்டபத்தில் ஒரு பரதநாட்டிய விருந்து அளித்தார். இப்பெண்மணி ஒரிஸா மாகாணததில் பிறந்து சென்னையில் கல்வி கற்று, அடையார்கலா க்ஷேத்திரத்தில் பரதநாட்டியம் பயின்றவர். மிகவும் அருமையாக நடனஞ் செய்தார். தங்கள் வாழ்வில் முதன்முறையாக அதனைக் காணும் வாய்ப்புப் பெற்ற அந்த அறிஞர் குழு "இது ஒரு தெய்வீகக் கலை" என்று ஆமோதித்தது. அந்தக் கன்னி இந்தக் கலையின் புனிதத் தன்மையை காப்பாற்ற ஐரோப்பாவில் செய்த சேவை போற்றுதற்குரியது. அதையும் விபரித்து இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

ஜெர்மனியில் சினிமாக்கம்பனிஒன்று தாங்கள் அப்போது தயாரித்த படமொன்றில் இந்துக் கோவிலையும் அங்கே நடக்கும் பரதநாட்டியத்தையும் சேர்த்துவிட விரும்பி செல்வி மீனுதிதாஸை அக்காட்சியில் தோன்றுமாறு கேட்டனர். ஒரு லட்சம் ரூபாய் தருவதாகச் சொல்லினர். அப்பெண்மணி நடனம் தன் விருப்பப்படி இருக்கவேண்டுமென வற்புறுத்தினர். நிர்வாகக் குழுமுன் மாதிரிக்கு நடித்துக் காட்டும் நாள் வந்தது. அப்பெண் பரதநாட்டியப் பரம்பரை உடையுடன் சமூகமளித்தனர். அந்த உடையைப் பார்த்த நிர்வாகக்குழுவினர் திகைத்தனர். "இப்படித் தலையிலிருந்து கால்வரைக்கும் ஆடையும், ஆபரணமும் உடலை மூடிக்கொண்டால் மக்கள் பார்ப்பது எதனை?" என்று கேள்வி கேட்டனர். அவர்கள் கேள்வியிலடங்கிய கருத்தை நன்கு புரிந்துகொண்ட அவ் வீரப் பெண், "அவர்கள் பார்க்கப்போவது உண்மையான பரதநாட்டியத்தை" என்று துடுக்கான பதில் இறுத்தார். மேலதிகாரி "பெண்ணே! பிடிவாதங்காட்டி ஒரு லட்ச ரூபா வருமானத்தை இழக்காதே. உடுப்பைக் குறைத்துக்கொள்" என்று புத்தி கூறினர். "எங்கள் கலை தெய்வீகக் கலை. அதை நான் உங்கள் பணச் சந்தையில் விற்க வரவில்லை" என்று பதில் கொடுத்துவிட்டு வெளிவந்து விட்டார் அக் கன்னி. பின்னர் ஆபாச உடை உடுத்த ஓர் ஐரோப்பியப் பெண்ணை அக் கட்சிக்கு நியமித்துப் படம் பிடித்துக் காட்டினர். இதைக் கேள்விப்பட்ட மீனுதி சீற்றங் கொண்டு பத்திரிகைகளில் கண்டனப் பிரசாரம் செய்து, கலாநிலையங்கள்மூலம் எதிர்ப்புக்காட்டி இந்திய ஸ்தானிகரைக் கண்டு அவர்மூலம் அரசாங்கத்திற்கு விண்ணப்பஞ் செய்து அசம்பாவிதமான அப்படத்தைக் காட்டாமற் செய்தனர். பரதநாட்டியக் கலையை நடராசப் பெருமானுகவே பாவித்துப் பேணும் ஒரு பெண்மணி அந்நிய நாட்டில் தன்னந்தனியனாய் நின்று எங்கள் கலைக்குச் செய்த அரும் பணி இது. செல்வி டொல்பியின் அடக்கம், பணிவு, பக்தி, பொருத்தமான உடை, ஆபரணம் எல்லாவற்றையும் அன்று பார்த்தபோது, மேலே குறிப்பிட்ட மீனுதி தாஸின் தோற்றமும் வீரச் செயலுமே என் மனக் கண் முன் தோன்றின. இவர்கள் போன்ற கன்னியர்களின் கலைச் சேவை உலகெங்கும் பரவுமாறு பராசக்தியை வேண்டுவோமாக!



மேலைநாட்டிலே பிறந்து தமிழ்க்கலைகளில் தலைசிறந்த நாட்டியக்கலையை இங்கு பயின்ற செல்வி டெல்பிஜோர்ஜ் நடனமாடும் ஒரு காட்சி. இவர் இலங்கையில் கனடாத் தூதுவராக இருந்த திரு. ஜேம்ஸ் ஜோர்ஜின் புதல்வியாவர்.

## 'தொழிலில்லாததால் பலமாணவர் நேரத்தை வீணுக்குகின்றனர்'

யாழ்ப்பாணம், புதன் "பாடசாலையை விட்டு வெளியேறிய ஆயிரக்கணக்கான மாணவர்கள் தங்கள் நேரத்தை வீணுக செலவு செய்கிருர்கள். அவர்களுக்கு வாழ்வளிக்க ஏதாவது ஒரு தொழிலை ஆரம்பித்து உதவ வேண்டும்" என்று சமூக பொருளாதார மாணவ முன்னேற்ற மன்றத் தலைவர் திரு. எஸ். யூ சோமசேகரம் நேற்றுமாலை கில்னர் கட்டட மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது கூறினர்.

தொழில் பாடசாலைகளை அதிகரிப்பது, வேலையற்ற மாணவருக்கு வேலை தேடிக் கொடுப்பது ஆகியவை பற்றி இக் கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டது.

போதியளவு நிதியும் இயந்திரங்கள் பெறும் வசதியும் இருப்பதால், ஒரு தையல் வகுப்பையும், சமையல் வகுப்பையும் ஆரம்பிப்பது பற்றி தெரிவிக்கபபட்டது. மட்பாண்டம், விளையாட்டு சமான்கள், தேநீர் கோப்பைகள் ஆகியவற்றையும் செய்ய இங்குள்ள இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டுமென ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

இத் தொழில்களை பழகுவதற்கு கட்டணம் அதிகமாக இருக்கும் காரணத்தினல் பலர் இவற்றை பழகாமலிருப்பதாகவும், கட்டணம் குறைக்கப்பட்டால் ஏராள மானவர்கள் பயில முன்வருவார்களென்றும் தெரிவிக்கப்பட்டது.

## கூ.மொ.வி. நிலையத்தில் திடீர் சோதனை

கொழும்பு, புதன் விவசாய, உணவு, கூட்டுறவு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. பி. மகாதேவா தலைமையில் சென்ற தூதுகோஷ்டியொன்று கொட்டாஞ்சேனை கூ. மொ. வி. ஜவுளி விற்பனவு நிலையத்தில் திடீர் பரிசோதனை நடத்திய பொழுது அங்கு ஏராளமான துணிச்சிப்பங்களிருக்கக் கண்டனர். துணிச்சிப்பங்களை சிலர் பெற்றுக் கொண்டதற்கான பற்றுச்சீட்டுகள் எழுதப்பட்டிருந்தபொழுதிலும் துணிச்சிப்பங்கள் அங்கிருந்து அவர்கள் கொண்டு செல்லாததுகுறித்து அவர்கள் ஆச்சரியமடைந்தனர். இக்கோஷ்டியில் சில பொலிஸாருமிருந்தனர்.

குறிப்பிட்ட துணிச்சிப்பங்கள் சில முதலாளிமாருக்கு விற்பனை செய்யப்பட்டதென்றும் அவர்கள் தாமதித்துவந்து துணிச்சிப்பங்களை எடுத்துச் செல்வார்கள் என்றும் கூறப்பட்டது.

இக்கோஷ்டியில் சென்ற சப் இன்ஸ்பெக்டர் பெரேரா கூ. மொ. வி. நிலையத்துக்கு அருகிலுள்ள கடையொன்றை சோதனையிட்டதில் அங்காடிகள் இருவர் 40யார் துணியும் 10 கூப்பன்களும் வைத்திருக்கக் கண்டார். இரு அங்காடிகளும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கபபட்டுள்ளனர்.

## மானிப்பாயில் குழந்தைகள் பாடசாலை

யாழ்ப்பாணம், வியாழன் ஐந்துவயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான 'மொன்டிசேரி' பாடசாலை ஒன்றை 'சமூக சோதி' இராசவாசல் திரு. சி. தியாகராஜா மானிப்பாயில் திறந்துவைத்தார். அப்பொழுது அவர் உரை நிகழ்த்துகையில், இம் முயற்சி பாராட்டக்கூடியதென்றும், எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்தியடைந்த பலபெண்கள் வேலையில்லாமல் இருப்பதால் அவர்களுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து போன்ற துறைகளில் போதிக்க வசதிசெய்து கொடுக்கப் படவேண்டுமென்றும் கூறினர்

## நூற்ருண்டு சுதந்திரப்போர்

புதுடில்லி மார்ச் 4 1857-ம் ஆண்டுமுதல் 1947-ம் ஆண்டு வரை நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தைக் காட்டும் ஓவியங்களும், தஸ்தாவேஜுகளும் கொண்ட பொருட்காட்சி இங்கு திறந்து வைக்கப்பட்டது.


இலங்கை எங்குமுள்ள வியாபாரிகளிடமிருந்தும்

**கொலிபிறி ஓடிகொலன்**

உடன் பெற்றுக்கொள்ளவும்

— முக்கிய அறிவிப்பு —

கலப்பில்லாத நல்ல பொருளைப் பெறுவதற்கு மூடியிலுள்ள சிவத்த சீல் உடையாமல் இருக்கின்றதா என்பதைக் கவனிக்கவும்.

சிறந்த ஜெர்மனி ஓடிகொலனையே பாவியுங்கள், கொலிபிறி என்றே கேளுங்கள்.

விற்பனையாளர்:-

ஏ. வி. ஆர். ஏ. அன் கோ.

19, செட்டியார் தெரு, கொழும்பு

தொலைபேசி: 7211 — 7212



# "சோவியத் நாட்டில் இன, மொழிப் பிரச்னை இல்லை"

## சோவியத் தூதுக்குழு தகவல்

மாவிட்டபுரம், செவ்

"மனிதகுலம் உள்ளளவும் சோவியத் நாட்டின் பிரதமர் திரு. குருஷ்சேவிற்கு இரு காரணங்களுக்காக கடமைப்பட்டிருப்பதுடன் நன்றியும் செலுத்த வேண்டும். ஒன்று கியூபாவில் சமாதானம் நிலவச்செய்து ரஷ்ய நாட்டின் சமாதான ஆர்வத்தை உலகிற்கு எடுத்துக் காட்டிவிட்டது. இந்திய—சீன எல்லைப் பிணக்கில் ரஷ்யா நடுநிலைமை வகித்ததும் மிகவும் வரவேற்கத்தக்கதாகும்" என்று உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி விடுதி மாணவர் மன்ற சார்பில் இலங்கை வந்திருக்கும் சோவியத் கலாச்சாரத் தூதுக்குழுவிற்கு தரப்பட்ட பொது வரவேற்புக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. சிவசுப்பிரமணியம் தலைமைவகித்துப் பேசுகையில் ரஷ்ய நாட்டின் விஞ்ஞான சாதனைகளைப் புகழ்ந்து கூறினர்.

சுன்னாகம் பட்டின சபையின் உப-தலைவர் டாக்டர் நடராசா நகரமக்கள் சார்பில் வரவேற்புரை நிகழ்த்தினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

கலாச்சாரத் தூதுக்குழுவின் தலைவர் டிவின்ச்கி பேசுகையில், இலங்கை மக்களின் சரித்திரம், மொழி பற்றி ஆராய்ச்சி நடத்தும் கழகத்தின் துணைத் தலைவர் என்றமுறையில், தாம் இந்த நாட்டு மக்களை நேரில் காண மகிழ்ச்சியடைவதாகக் கூறினர்.

மேலும் பல தமிழ் நூல்களை தமது ஆராய்ச்சிக் கழகம் ரஷ்ய மொழியில் ஆக்கியுள்ளதாகவும் சிறப்பாக திருக்குறள் பற்றியும் குறிப்பிட்டார்.

டாக்டர் திருமதி கௌமரோவா பேசுகையில், தான் ஒரு சிறுபான்மை இனத்தவர் என்றும் 10 லட்சம் மக்கள் வாழும் இந்த இனம் ரஷ்யாவின் சகல துறைகளிலும் சம உரிமைபெற்று தம்மைத் தாமே ஆட்சிபுரியும் பிரதேச சுயாட்சி பெற்ற குடியரசாகுமென்றும் கூறினர். சோவியத் நாட்டில் இனப்பிரச்னை, மொழிப் பிரச்னை எதுவும் கிடையாதென்றும் அவர் கூறினர்.

இலங்கை—சோவியத் நட்புறவுச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைச் செயலாளர் திரு. வ. பொன்னம்பலம் நன்றி கூறினர்.

---

## மே. ஜெர்மன் தலைவர் இலங்கை விஜயம்

கொழும்பு, புதன்

பெர்லின் (மேற்கு ஜெர்மனி) ஜனப்பிரதிநிதிகள் சபை உபதலைவர் திரு. வொல்பிறேம் முல்லர் போக் நாளை கொழும்பு வந்து சேருவார். இலங்கையில் அவர் ஐந்து நாட்கள் தங்கியிருப்பார்.

---

## வான் மோதி வயோதிபர் காயம்

கொழும்பு, புதன்

ஹொரணை இ. போ. ச. டிப்போவுக்குச் சொந்தமான வான் ஒன்று தந்திக்கம்பமொன்றுடன் மோதுண்டு பின்னர் ஒரு வயோதிபரையும் மோதி வீழ்த்தியதால் அவர் படுகாயங்களுடன் ஹொரணை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

## புதிய மனேஜர்

கொழும்பு, புதன்

தேசிய லொத்தர்சபையின் புதிய ஜெனரல் மனேஜராக கூட்டுறவுப் பகுதியின் உதவிக்கமிஷனர் திரு. எச். பி. வீரரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

---

## திருக்கேதீச்சரத்தில் மடம் நிறுவப்படும்

### கொழும்பு இந்து வாலிபர் சங்கம் முடிவு

கொழும்பு, புதன்

கடந்தவார இறுதியில் நடைபெற்ற கொழும்பு இந்து வாலிபர் செயற்குழுக் கூட்டத்தில் திருக்கேதீச்சரத்தில் கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தினருக்கு ஒதுக்கப்பட்ட காணியில் ரூபா 75,000-க்கு மேற்படாத தொகையில் கட்டடம் ஒன்றினை நிறுவுவதற்கான திட்டம்பற்றி பரிசீலனை செய்யப்பட்டு இறுதியில் செயற் குழுவினரால் ஏற்கப்பட்டது. இதற்கு வேண்டிய நிதி சேர்ப்பதற்கு மூன்றுபேரைக்கொண்ட ஒரு சபையும் நிறுவப்பட்டது. இதுபற்றிய விபரம் தயாரித்து பொதுமக்களுக்குத் துண்டுப் பிரசுரங்கள் மூலம் நிலைமையை நன்ருகி விளக்கவேண்டும் என்ற செயற்குழுவின் ஏகமனதான முடிவின் பெயரில் இத் தீர்மானம்ஏற்கப்பட்டது.

இம்மாதம் இந்து வாலிபர் சங்கத்தினர் மகா சிவராத்திரிக்கு திருக்கேதீச்சரம் செல்லும்பொழுது இக் கட்டடத்திற்கு அத்திவாரக்கல் நாட்டுவார்கள் எனத் தெரியவருகின்றது.

---

நாரந்தனை

## கிராமசபை தேர்தல் நியமனம்

ஊர்காவற்றுறை, புதன்

பதின்மூன்று வட்டாரங்களைக்கொண்ட நாரந்தனைக் கிராமசபைத் தேர்தல் நியமனப்பத்திரங்கள் இம்மாதம் 7-ந் திகதி கிராமசபைக் காரியாலயத்தில் தேர்தல் அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப் படவிருக்கின்றன. பல புதியவர்களும் இம்முறை போட்டியிடுகிருர்கள். சில வட்டாரங்களில் இடதுசாரி ஐக்கிய முன்னணியை ஆதரிக்கும் சிலர் போட்டியிடத் தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது. கட்சி ரீதியில் தமிழரசுக்கட்சியினர் போட்டியிடாதுவிட்டாலும் அநேக வட்டாரங்களில் அக்கட்சியின் ஆதரவாளர்கள் போட்டியிட முயற்சித்து வருகின்றனர். ஓய்வு பெற்ற கிராமத் தலைமைக்காரர் சிலரும் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளனர் எனவும் அறியப்படுகிறது.

---

## வதிரியில் கரப்பந்தாட்டம்

உடுப்பிட்டி, செவ்.

வதிரி 'யாழ்டன்' விளையாட்டுக் கழகத்தினரால் வதிரி சிவியன் மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் இரண்டு கோஷ்டிகள் கலந்து கொண்டன.

வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகத்திற்கும் வடமராட்சி தெரிவுகோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற போட்டியில் வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. எஸ். கமலநாதன் கடமையாற்றினர்.

இரண்டாவதாக 'பொம்பஸ்' கோஷ்டிக்கும் 'கரவெட்டி யூனியன்' கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் 'பொம்பஸ்' வெற்றியீட்டியது இப்போட்டிக்கு திரு. வேலும் மயிலும் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

மின்னொளியில் நடைபெற்ற இவ்விரு போட்டிகளையும் பெருந்திரளான ரசிகர்கள் கண்டு களித்தனர்.

---

ஆசிரியருக்கு கடிதம்

## திருக்கேதீச்சர திருப்பணி

நமது இலங்கை சுதந்திரம் பெற்றபின் இரண்டு புனித ஸ்தலங்கள் புனருத்தாரணம் செய்ய ஆயத்தம் செய்தது ஒன்று சைவர்களுக்கு கண் போன்றதும், நாயன்மார்களால் பாடல் பெற்றதுமான திருக்கேதீசரம். மற்றது பௌத்தர்களின் பழமையான மகியங்கனை என்ற புத்தவிகாரை மகியங்கனை பௌத்தர்களின் இடையாரு பெருமுயற்சியால் புதுப்பித்து ஒரு நவீன பட்டணமாகவும் புனித ஸ்தலமாகவும் விளங்குகிறது. ஆனதால் பௌத்த சிங்கள சகோதரர்கள் ஆட்சி பீடமேறி ஆனந்தமான வாழ்வு நடத்துகிருர்கள். தமிழ் சைவமக்களோ எனில் திருக்கேதீஸ்வரத்தை மறந்து வேறுபல ஆடம்பரமான தமக்கு வேண்டாத செயலில் காலம் கழிப்பதால் இன்னமும் திருக்கேதீச்சரம் புனருத்தாரணம் செய்யப்படவில்லை. இதனுல் தமிழன் எல்லையற்ற துன்பத்துக்கும் அடக்கி ஒடுக்குவதற்கும் ஆளாகி தனது மொழிசமயம் இவைகளுமே ஊசலாடும் நிலையைக் காணுகின்ருன் இன்னமும் தான் விழிப்படையவில்லை தமிழன். உயர்ந்து, தனது பண்பாட்டோடு வாழ வேண்டுமானுல் தனது சொந்த நலனையும ஆடம்பரச் செயல்களையும் விட்டொழித்து இன்றே திருக்கேதீஸவரத்தை பண்டைய பாடல்களிற்காணும் நிலக்கு உயர்த்துவானேயானுல் அன்று தான் தமிழன் இன்னல் தீரும். மானத்துடன் வாழ்வான். இது தவிர்ந்து எத்தனை கோவில் புதுக்கக் கட்டினுலும் வேறு எத்தனை கோவில்கள் திருத்தி கும்பாபிஷேகம் செய்வித்தாலும் மடங்கள் கட்டி அன்னதானங்கள் நடாத்தினுலும் திருக்கேதீச்சரம் திருபபணி முற்றுப் பெறச் செய்யாவிட்டால் தமிழன் வாழ்வு உயர்வடையாது. ஆகவே காலந் தாழ்த்தாது திருப்பணிமுற்றுவிக்க இன்றே ஆவன செய்யவேண்டும்.

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம்.

---

## வானெலிநிகழ்ச்சிகள்

### வியாழன் 5-3-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட், 7-00 'நாடும் நாமும்', 7-15 நேயர் விருப்பம், 7-45 தொடர் நாடகம் 'மட்டக்களப்பு மாப்பிள்ளை, — எஸ். பொன்னுத்துரை எழுதியது, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம், 10-00 நிலையஒலிப்பதிவுகள்.

---

## இடமாற்றம்

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த சேகரத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக தொண்டாற்றி தற்போது கோமாரிச் சபைக்கு மாறிச் செல்லும் திருமதி ஆர். எஸ். சீவரத்தினம் அம்மாளின் பிரிவுபசார நன்றியுணர்வாராதனை பருத்தித்துறை மெதடிஸ்ததேவாலயத்தில் நடைபெற்றது. சேகரஊக்கிராணக் காரர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வாராதனை கைனம் டபிள்யு. ஏ. இராசதுரை, வண. சி. ஜே டானியல் ஆகியோர் நடாத்திவைத்தனர்.

---

## பால் நிலைய திறப்பு விழா

சுழிபுரம், புதன்

தொல்புரம் கொட்டியாவத்தை கலைவாணி சன சமூக நிலையத்தினரின் புதிய பால் நிலையமொன்றை வடபகுதி சுகாதார சேவை அதிகாரி சி ஆர். நதானியல்ஸ் ஆரம்பித்து வைத்தார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:- இப் பகுதியில் வாழும் மக்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த பாடுபட்டு உழைப்பவர்கள். மிகவும் நெருக்கமாக வாழ்ந்து அதிக போஷாக்கு உணவு இல்லாமல் நோய், துன்பங்கள் போன்றவற்ருல் அவதிப்படுகின்றனர். இந்த நேரத்தில் வடபகுதி சுகாதாரப் பகுதியினர் சிறு பிள்ளைகளுக்கு பால் உணவு கொடுக்க முன்வந்தது ஒரு வரப்பிரசாதமாகும் தமிழ் சமுதாயம் முன்னேறவேண்டுமானுல் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு பகுதியாக முன்னேற வேண்டும். தமிழ் சமூகம் முன்னேற நமது வாழ்க்கையை சுகாதாரவசதிகளுடன் செப்பனிடவேண்டும். முன்னேற்றமான காரியங்களில் ஈடுபட்டு உழைக்கும் வாலிபர்களுக்கு ஒத்துழைப்புக்கொடுத்து அவர்கள் சேவையை பயன்படுத்தவேண்டும்.

திருவாளர்கள் சு. தில்லைநாதன், கை. சிவபாதம், செ. கந்தையா, கா. சின்னத்துரை ஆகியோரும் பேசினர்.

---

மிருசுவில்

## கிராமசபை தேர்தல்

### இருவர் போட்டியின்றித் தெரிவு

கச்சாய், புதன்

மிருசுவில் கிராமசபை பொதுத் தேர்தல் சம்பந்தமாக அபேட்சகர்கள் சமர்ப்பித்த நியமனப் பத்திரங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை சங்க மண்டபத்தில் தேர்தல் அதிகாரியால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

11 வட்டாரங்களை கொண்ட இக்கிராமச் சபையில் 3-ம், 4-ம் வட்டாரங்களுக்கு போட்டி எதுவும் இல்லாததால் திருவாளர்கள்: சின்னப்பு-பொன்னுத்துரை (தற்போதைய 3-ம் வட்டார உறுப்பினர்) ஏ. டி. பொன்னுக்கோன் (தற்போதைய தலைவர்) ஆகியோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்கள். ஏனைய 9 வட்டாரங்களிலும் 23 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்.

---

## "தூய்மையும் பண்புமளிக்கும்" திருக்குறள்

தெல்லிப்பழை, புதன்

"அறநூல்கள் மனிதனின் உள்ளத்து இருள் போக்கி தூய்மையையும் பண்பையும் அளிக்கின்றன. அந்தகைய அற நூல்களுள் சிறந்ததென்று அனைவராலும் போற்றப்படும் பெருமைபெற்றது திருக்குறள்" என்று புலவர் ம. பார்வதிநாதசிவம் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியில் நடைபெற்ற திருவள்ளுவர் தினவிழாவில் பேசுகையில் கூறினர்.

புலவர் ம. பார்வதிநாதசிவம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

சாதாரண மனிதர்களைக்காட்டிலும் உண்மைகளை நல்ல முறையில் காணக்கூடிய ஆற்றலை இறைவன் அருளால் சிலர் பெற்றுவிடுகின்றனர். அவர்களே மெய்ப்பொருள் அறிஞர் என்று கூறப்படுகின்றனர். அத்தகை மெய்ப்பொருள் அறிஞர்களுக்குள் எல்லாம் தலைவராக திருவள்ளுவர் விளங்குகின்ருர். திருவள்ளுவர் கண்ட உண்மைகளைப் பிற்காலப் பாவலர்கள் தம்முடைய இலக்கியங்களில் கையாண்டு தம்முடைய படைப்புகளைச் சிறப்புறச் செய்தனர்.

---


## உள்ளூராட்சி சேவை

காரியாலய காரிய சகாயர் பதவி

கிராமசபை - சுழிபுரம்.

1. மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பங்கள் கோரபபடுகின்றன.
2 சம்பள விகிதம் ரூபா 540/- —22X12 — ரூபா 804/- ஒருவருடத்திற்கு.
3. முடிவு திகதி - பங்குனி 31 - 1964.
4. வேறு விபரங்களுக்கு 13-3-64 அரசாங்க வர்த்தமானியின் IV-ம் பிரிவைப் பார்க்கவும்.

எஸ். கந்தசுவாமி,
தலைவர்,
கி. ச. சுழிபுரம்.

கிராமசபைக் காரியாலயம்,
சுழிபுரம்,
3-பங்குனி-1964. 106

---

## செயலாளர் தேவை

1 யோகபுரம் 2-ம் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு நிர்வாகச் செயலாளர் தேவை.

2. விண்ணப்பங்கள் 14-3-64 க்கு முன் பதிவுத் தபாலில் கௌரவ காரியதரிசி, ப. நோ. கூ. சங்கம், யோகபுரம் 2-ம் பகுதி, துணுக்காய் என விலாசமிட்டு இடதுமேல் மூலையில் 'காரியதரிசி விண்ணப்பம்' என எழுதப்பட்டு அனுப்பப்படவேண்டும்.

தராதரம்

1. வயது: 25-க்கு மேல்.
2. கல்வி: S. S. C. ஆங்கிலம், (தமிழ் எழுத வாசிக்க)
3. பிணை: ரொக்கம் 1000/- ,, ஆதனம் 2000/-
4. ஒழுக்க சான்றிதழ் D. R. O., கடைசியாகக் கல்வி கற்ற கல்லூரிதலைமை ஆசிரியர்.
5. கூட்டுறவுப் பாடசாலையில் சித்தியடைந்தவருக்கு விசேட சலுகையுண்டு.

குறிப்பு: பிணைப்பணம் 500 உடனடியாகச்செலுத்தி மீதி 500ஐ மாதவீதம் சம்பளத்திம் கழிக்கும் ஒழுங்கும் செய்யலாம். சம்பளம் தராதரத்திற்கேற்ப வழங்கப்படும்.

கா. தம்பு,
29-2-64 காரியதரிசி. 104

---

## வரி விளம்பரம்

### கார் விற்பனைக்கு

EL 5000 இலக்கத் தொடருடைய வாக்ஸால் வெலொக்ஸ் கார் விற்பனைக்கு உண்டு. முற்றிலும் திருத்தப்பட்டு மிக நன்ருக வேலைசெய்யும் நிலையில் புதிய ஆசன உறைகளுடன் இருக்கிறது. கலந்து கொள்க:-

இராசையா, ட்ரேட் அன்ட் ட்ரான்ஸ்போர்ட் கம்பெனி, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 18

---

### விற்பனைக்கு

ஓட்டுமடம் சந்திக்கருகாமையில் வீடு வளவுடன் 14 பரப்பு செய்கைப் பயிருடனும் கிணறு 2ம் உள்ள காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். த. கனகரத்தினம், செல்ல மாளிகை, உரும்பராய் என்னும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். 14


---

## ரூ.3கோடி கடனுதவி இலங்கைக்கு கனடா வழங்கும்

கொழும்பு, புதன்

இலங்கை அரசாங்கத்துக்கு கனடா மூன்று கோடியே முப்பது லட்சம் ரூபா கடன் வழங்கும். கொழும்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இக்கடனுதவி சம்பந்தமான உடன்படிக்கையில் நேற்று இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் இலங்கையிலுள்ள கனடா ஹைகமிஷனர் திரு. ஜேம்ஸ் ஜோர்ஜும் கையெழுத்திட்டனர்.

# பாக். காஷ்மீரில் ராணுவ நடமாட்டம் அதிகரிப்பு

## சாவன் தகவல்

புதுடில்லி, மார்ச் 4

**பாகிஸ்தான்வசமுள்ள காஷ்மீர் பகுதியில் ராணுவ நடமாட்டம் அதிகரித்துவருவதாயும், கிழக்கு பாகிஸ்தானில் வெளிப் பாதுகாப்புநிலை பலப்படுத்தப்பட்டு வருவதாயும் இந்திய பாதுகாப்புமந்திரி திரு. சாவன் லோகசபையில் கூறினர்.**

பிரஜா சோஷலிஸ்ட் அங்கத்தினர் திரு. ஹேம்பருவாவும் இதர அங்கத்தினர்களும் கொண்டுவந்த கவனஈர்ப்புப் பிரேரணைமீது அவர் பேசினர்.

"பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் ராணுவ நடமாட்டமும், ராணுவவண்டிகள் நடமாட்டமும் காணப்படுவதாய் தகவல் வந்திருக்கிறது. திரிபுரா, கிழக்கு பாகிஸ்தான் எல்லைகளிலும் வெளிக்காவல் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. பாதுகாப்புக் குழிகள் தோண்டப்பட்டிருக்கின்றன. இவை அரசாங்கத்துக்குத் தெரியும். ஆனல் மிரட்டல்களைச் சமாளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது" என்றும் திரு. சாவன் கூறினர்.

## வட மாகாண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்விச்சேவை சம்பந்தமான எல்லா நிலைகளிலும் ஆசிரியர் பிரதிநிதிகளுக்குப் பங்குரிமை.

கல்விச்சேவை ஆணைக்குழு அமைத்தல்.

தேசிய கல்வி ஆணைக் குழு கூறிய ஆலோசனைப்படி பாடசாலைகளில் அதிபர்களையும் உதவி அதிபர்களையும் நியமனம் செய்வதற்கு உடனடியாகத் திட்டங்களை வகுத்தல்; ஆசிரியர் சங்கங்களின் ஆலோசனையுடன் எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரு மூப்புச்சேவை அட்டவணை உடனடியாகத் தயாரித்தல்; அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதற்குப்பின் செய்த அதிபர், உப அதிபர், தற்காலிக நியமனங்கள் ஆகியவற்றை ரத்துச் செய்தல்

பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்ட நாள் தொடக்கம் இற்றைவரை செய்யப்பட்ட நியமனங்கள், இடமாற்றங்கள், உத்தியோக உயர்வுகள் யாவற்றையும் பரிசீலனை செய்வதற்கு ஒரு விசாரணைக் குழுவினை நியமனஞ்செய்தல்.

சுற்றறிக்கை இல. 618, தமிழ் மூலம் கல்வி பயிற்றும் பாடசாலைகளிலிருந்து உடனடியாக வாபஸ்செய்துகொள்ள வேண்டும்.

6 தொழிற்சங்கங்கள் சமர்ப்பித்துள்ள 21 கோரிக்கைகளும் இக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது

## காவுக்கு இயந்திரப் படகுகள்

லண்டன், மார்ச் 5

ஆறு நவீன பிரிட்டிஷ் இயந்திரப் படகுகளை வாங்க கானு அரசாங்கம் ஒழுங்குசெய்துள்ளது. இந்த இயந்திரப் படகுகள் 30,00,000 பவுண் பெறுமதியுள்ளது. இவற்றில் குளிரசாதன அமைப்பும் உள்ளது. முதற் படகு அடுத்த ஆண்டில் ஆயத்தமாக இருக்கும். மூன்று வருடங்களில் இவை அனுப்பி வைக்கப்படும்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)


வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 3 திரைகளில்

சிவாஜி கணேசன் — விஜயகுமாரி

முத்துராமன் — சௌகார் ஜானகி

மற்றும் பலர் நடிக்கும்



பார் மகளே பார்

பணம், அந்தஸ்து, மதிப்பு இவைதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று கருதும் ஜமீன்தாராக நடிகர்திலகமும் அவரது இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் தோன்றுகிறார்கள்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் -1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## டிகால் மத்தியஸ்தம்

பாரிஸ், மார்ச் 4

சைப்ரஸ் விஷயத்தில் சமரசம் செய்து வைக்கத் தாம் தயாராய் இருப்பதாக பிரஞ்சு அதிபர் ஜெனரல் டிகால் கூறியிருக்கிறார். சைப்ரஸ் அதிபர் மக்காரியோஸ், ஜெனரல் டிகாலின் மத்தியஸ்தத்தைச் சமீபத்தில் கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## தபால் தந்தி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட ஒரு வேலையைச் செய்யும் ஒரு உத்தியோகஸ்தர் வராவிட்டால், வேறு வேலை செய்பவர் வராதவரின் வேலையைச் செய்வது வழக்கம். ஆனல் நாளை தொடக்கம் ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் தங்கள் வழக்கமான வேலையையே செய்வார்கள். வேலைக்கு வராத ஒருவருடைய இடத்துக்கு வேலை செய்ய மறுப்பார்கள். எனவே நாளை தபால், தந்திச்சேவை மேலும் மோசமாகும் என நம்பப்படுகிறது. உதாரணமாக ஒரு தபாற்கந்தோரில் மணியோடர் பகுதியில் வேலை செய்பவர் வராவிட்டால் அங்கு மணியோடர் மாற்றவோ செலுத்தவோ முடியாத நிலை ஏற்படலாம் என கருதப்படுகிறது. வேலைக்கு வராதவர்களின் வேலையை மற்ற ஊழியர்கள் செய்ய மறுப்பதால் பொதுமக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாவதுடன், பல வேலைகளும் ஸ்தம்பிதமாகலாம் எனவும் கருத்து நிலவுகிறது.

### தபால் பைகள் தேங்குகின்றன

இன்று கொழும்பு மாவட்டத்தில், பதிவு செய்யப்பட்ட கடிதங்களில் காற்பங்கும், அன்சூர் செய்யப்பட்ட கடிதங்களில் ஒரு சிறு தொகையுமே விநியோகிக்கப்பட்டன. பார்சல்கள் எதுவுமே விநியோகிக்கப்படவில்லை. வெளியூர்கள் பலவற்றுக்கு இங்கிருந்து தபால் பைகள் அனுப்பப்படவில்லை. கொழும்பிலிருந்து வெளியூர்களுக்கு அனுப்பப்படும் தபால்கள் அதிகம் தாமதமாகியே போய்க்கிடைக்கின்றன. வெளியூர்களிலிருந்து வந்த தபால் பைகள் பல திறக்கப்படாமலே தபால் அறையில் தேங்கிக் கிடக்கின்றன. தபால் பைகள் தேங்கிக் கிடப்பதால் பைகள் போட இடமில்லாத காரணத்தால் திருக்கோணமலையிலிருந்துவந்த தபால்பை யாழ்ப்பாணம் புகையிரதத்தில் அனுப்பப்பட்டு பின்னர் தபால் அறையில் சேர்க்கப்பட்டது. நீர்கொழும்பிலிருந்து தபால் பைகள் அனுப்பப்படவேயில்லை. கண்டி தபாற்கந்தோரில் எவ்வித காரியாலய வேலையும் நடைபெறவில்லை.

### தபால் மூலம் தந்திகள்

இன்றைய தினம் கொழும்பு மத்திய தந்திக் கந்தோரிலிருந்து சுமார் 10,000 தந்திகள் தபாலில் அனுப்பப்பட்டன. நேற்றைய தினம் சுமார் 5000 தந்திகள் தபாலில் அனுப்பப்பட்டன. தந்திகள் தபாலில் அனுப்பப்பட்ட போதும் பொதுமக்களுக்கு தாமதம் பற்றி எதுவும் தெரிவிக்காமலே தந்திகளை தபால் உத்தியோகஸ்தர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். பண்டாரவளை, மாத்தளை, காலி, பதுளை நுவரெலியா, இரத்தினபுரி, மாத்தறை, குருநாகல் ஆகிய இடங்களில் பொதுமக்கள் வெளியிடங்களுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முடியாதிருக்கின்றனர்.

மத்திய தந்திக் கந்தோரில் உள்ள தந்தி கொடுக்கும் யந்திரங்கள் வழமைபோல் துரிதமாக இயங்கவில்லை. கொழும்பு மத்திய தந்திக் கந்தோர், பெரிய தபாற்கந்தோர் ஆகியவற்றில் வேலை செய்யும் 43 ஊழியர்கள் நாளை சுகயீனம் காரணமாக வேலைக்கு வரமாட்டார்களென அறிவித்தல் கொடுத்துள்ளார்கள்.

இன்று மத்திய தந்திக் கந்தோரின் மின்சார தொடர்பால் இயங்கி வரும் பல இலாகா மணிக்கூடுகள் நின்றுவிட்டன. பார்லிமெண்ட் மணிக்கூடும் இன்று ஸ்தம்பித்தது.

தபால், தந்தி சேவைகளின் நிலைபற்றி ஆராய நாளை மாலை தபால் தந்தி சேவை தொழிற்சங்க சம்மேளனம் கூடுகிறது.

# பட்டப்பகலில் வழிப்பறி

## கொட்டடியில் சம்பவம்

யாழ்ப்பாணம், வியா.

பட்டபகலில் தெருவில் சென்றுகொண்டிருந்த ஒரு பெண்ணின் தங்கச்சங்கிலியை சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவர் வழிப்பறி செய்ய முயற்சித்த சம்பவமொன்று நேற்று கொட்டடியில் இடம்பெற்றது.

நேற்று முற்பகல் சுமார் 11 மணியளவில் கொட்டடி சீனிவாசகம் வீதியால் இரு கைகளிலும் உணவுப்பொருள்களை ஏந்திக்கொண்டு சென்ற ஒரு பெண் கழுத்தில் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை குறிப்பிட்ட வீதியால் சைக்கிளில் வந்த அன்சா என்பவர் வழிப்பறி செய்யும் முயற்சியில் சைக்கிளில் சென்றுகொண்டே அவரது சங்கிலியை எட்டிப் பற்றியபோது அதிர்ச்சியடைந்த அப்பெண் அன்சா என்பவர் அணிந்திருந்த சாரத்தைப் பிடித்துக்கொண்டு 'ஐயோ' எனக் கூக்குரலிட்டபோது சம்பவம்நடந்தஇடத்துக்குச்சமீபத்திலுள்ள கராஜ்ஜிலிருந்து ஓடிவந்து வழிப்பறிமுயசியில் ஈடுபட்டதாகக் கருதப்பட்டவரைபபிடித்ததாக அறியப்படுகிறது.

பெண் அணிந்திருந்த தங்க சங்கிலி சுமார் மூன்று பவுண் எடையுள்ளதாகத் தெரிகிறது. இந்தச் சங்கிலியை குறிப்பிட்ட நபர் பிடித்திழுத்ததால் சங்கிலி அறுந்து துண்டுகளாகி நிலத்தில் சிதறியதாகவும் தெரிகிறது.

வழிப்பறி முயற்சியிலீடுபட்ட இந்த நபர் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பொலிஸார் இவரை விளக்கமறியலில் வைத்துள்ளனர். தங்கச்சங்கிலித்துண்டுகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

---

புதுடில்லி, மார்ச் 3

காஷ்மீர் பிரச்சினை சம்பந்தமாக ஐ. நா. பந்தோபஸ்து சபையில் நடைபெற்ற விவாதத்தின்போது பிரிட்டிஷ் பிரதிநிதி தெரிவித்த அபிப்பிராயத்தை தாம் ஆதரிக்கவில்லையென பிரிட்டிஷ் தொழிற்கட்சி தெரிவித்துள்ளது.

### டாக்டர்களின் வேலை நிறுத்தத்துக்கு ஆட்சேப ஊர்வலம்

யாழ்ப்பாணம், வியாழன்

வைத்திய நிபுணர்களும் அரசாங்க வைத்தியர்களும் செய்துவரும் வேலைநிறுத்தத்தைக் கண்டிக்குமுகமாக நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. இதில் வாலிபர்கள் உட்பட நூற்றுக்கணக்கானேர் கலந்துகொண்டனர்.

மாலை 5 மணியளவில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஸ்ரான்லி வீதியிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்திலிருந்து ஆரம்பமாகி நகரின் பிரதான வழிகளால் வந்து ஆஸ்பத்திரியை அடைந்தது. வைத்தியர்களை வேலைக்குத் திரும்புமாறு கேட்டுக்கொள்ளும் சுலோகங்களை தாங்கிச் சென்றதுடன் கோஷங்களும் எழுப்பப்பட்டன.

கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர்சங்க யாழ்ப்பாணக் கிளையால் இந்த ஆட்சேப ஊர்வலம் நடத்தப்பட்டது.

### இந்திய விமானம் நதியுள் மூழ்கியது

#### 22 பேர் மாண்டனர்

புதுடில்லி, மார்ச் 4

இந்திய விமானப்படையைச் சேர்ந்த விமானமொன்று கல்கத்தாவுக்கு அண்மையிலுள்ள கூக்ளி நதியுள் இன்று விழுந்து நொறுங்கியது.

இதில் பிரயாணம் செய்த 22 விமானப்படை உத்தியோகஸ்தர்கள் கொல்லப்பட்டதாக அறியப்படுகிறது.

விமானம் பிரயாணத்தை ஆரம்பித்த 5 நிமிடத்தில் இவ்விதம் விழுந்ததாக நம்பப்படுகிறது.

### ஐந்தாவது ஜார்ஜ் மன்னர் வெள்ளிவிழா ஞாபகசபை

இச்சபை 1935-ம் வருடம் வயோதிபர் விடுதிக்காக நிறுவப்பட்டது. இப்போது அதையே 18 வயதுக்குக் குறைந்த உடற்குறைபாடுள்ளவர்களின் விடுதியாக (Physically disabled) நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று மார்ச் மீ 5-ந் திகதி வியாழக்கிழமை மாலை 6-40 மணிக்கு, இவ்விரு பண்ணையிலுள்ள சபைக கட்டடத்தில் திறக்கப்படும்.

இதில் சேர விரும்புவர்கள் 5-ந் திகதியன்றும் அதன் பிறகும் இந்த இல்லத்துக்கு சமுகம் தருக.

தா. சங்கரப்பிள்ளை,
கௌரவ காரியதரிசி.
16

### மரண அறிவித்தல்



இ. நல்லதம்பி J. P.

நீர்கொழும்பு பிரபல வர்த்தகரும் இ. நல்லதம்பி ஸ்தாபனத்தின் உரிமையாளருமாகிய இ. நல்லதம்பி J P. அவர்கள் 4-3-64 புதன்கிழமை காலமாகிவிட்டார்கள். இவர் மகேஸ்வரியின் அருமைக் கணவரும்; சந்திரா, அரிச்சந்திரன், தற்பரா, குமாரச்சந்திரன் ஆகியோரின் அருமைத் தந்தையும்; காலஞ்சென்ற இ. சிற்றம்பலம், பிரபல வர்த்தகர்கள் மாணிக்கம், திருமதி யோகம்மா, சண்முகம், சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும்; சிங்கப்பூரைச் சேர்ந்த திரு. கந்தசாமி, ரெவினியூ கொமினிக்கோஷன் சுப்பிரின்ரென்டன்ற் நாகலிங்கம், P. W. D. இன்ஜினியர் தருமரெட்ணம் ஆகியோரின் மைத்துணரும் ஆவர். அன்னரின் பூதவுடல் தகனக்கிரிகைக்காக 5-3-64 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கடற்கரைத் தெரு 156-ம் இலக்கத்திலிருந்து நீர்கொழும்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தா. கனகசுந்தரம்,
136, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
15